### திருக்குறள் செம்மல்

# ந. மணிமொழியனார் முத்தமிழ் ஆயம்

### தொடக்க விழா



சேலம் விநாயகா மிஷன்ஸ் பல்கலைக்கழகத்தின் இயக்குநர் டாக்டர் அனுராதா கணேசன் அவர்கள் ஆற்றிய வரவேற்புரை

தமிழர்களுக்கும் தமிழ் நாட்டிற்கும் அடையாளமாக விளங்கும் உலகப் பொது மறையான திருக்குறளையும் அதனை உருவாக்கித் தந்த திருவள்ளுவரையும் பாமரன் முதல் படித்தவர்கள் வரை அறியவைக்கும் பெரும் முயற்சியை எடுத்துக் கொண்டு அதில் வெற்றியும் கண்ட மதுரை திருக்குறள் செம்மல் ந.மணிமொழியனார் அவர்களின் நினைவாக ஆறுபடை வீடு தொழில் நுட்பக் கல்லூரியில் தொடங்கப் பெறும் "முத்தமிழ் ஆயம்"; தொடக்க விழா மற்றும் Empower -17 நிகழ்ச்சிக்கு வந்திருக்கும் அனைவருக்கும் வணக்கம்.

இப்பெரும் விழாவிற்குத் தலைமை தாங்க வந்திருக்கும், தொழிலில் கடுமையான உழைப்பும், இடைவிடாத சிந்தனையும் கொண்டு, எண்ணித்

துணிந்து, உறுதியோடும் 'செயல்படுவதோடல்லாமல்

"அழல்மண்டு போழ்தின் அடைந்தவர் கட்கெல்லாம் நிழல் மரம் போல் நேரொப்பத் தாங்கி - பழுமரம் போல் பல்லார் பயன்துய்ப்பத் தான் வருத்தி வாழ்வதே நல்லான் மகற்குக் கடன்"

என வாழ்ந்து வரும் விநாயக மிஷன்ஸ் பல்கலைக் கழகத்தின் வேந்தர் உயர்திரு A.S. கணேசன் அவர்களே,

இந்நிகழ்ச்சிக்கு வர இயல வில்லை என்றாலும் வரை சிறப்புப் பேருரை நல்க இசைந்த "சமன் செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந் தொருபால் கோடாமை சான்றோர்க் கணி" எனவும் பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் எனதுக் கேற்ப பெருமையுடன் வாழ்ந்து வரும் மேனாள் மேதகு உச்சநீதிமன்ற நீதியரசர், மேனாள் இந்திய சட்ட ஆணையத் தலைவர் மாண்புமிகு அய்யா திரு ஏ.ஆர்.லட்சுமணன் அவர்களே,

சிறப்பு அழைப்பாளர் விநாயக மிஷன்ஸ் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் முனைவர் திரு.வி.ஆர்.ராஜேந்திரன் அவர்களே,

"மதிநுட்பம் நூலோடு
உடையார்க்கு அதிநுட்பம்
யாவுள முன்னறி பவை"

என்ற நூலறிவும் நுண்ணறிவு மிக்க அறிவறிந்த மூத்த அறிவுடையார் பெருமைமிகு Provost முனைவர் மு.பொன்ன வைக்கோ அவர்களே,

"நவில்தொறும் நூல்நயம்
போலும் பயில்தொறும்
பண்புடையாளர் தொடர்பு"

"செயற்கரிய யாவுள
நட்பின் அதுபோல்
வினைக்கரிய யாவுள காப்பு"

என என் தந்தையார் திரு. மணிமொழியனாருடன் திருக்குறள் நட்புக் கொண் டாடிய பெரியவர், "நகைச் சுவை இமயம்" பேராசிரியர் திரு.கண. சிற்சபேசனார் அவர்களே,

"தம்மின் தம்மக்கள்
அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க்கு எல்லாம் இனிது"

என தம் தந்தையார் தமிழ் இசைக்கு ஆற்றிவந்த தொண்டுகளைத் தாமும் செய்து இசையும் இசைக்கு இலக்கணமாகத் திகழும் பத்மஸ்ரீ டாக்டர். சீர்காழி சிவசிதம்பரம் அவர்களே,

‘சட்டங்கள் ஆழ்வதும், பட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்’;

என்ற பாரதியின் கூற்றுக்கு எடுத்துக்காட்டாக, நாடகத் துறையில் ஆய்வு செய்து, மேடைக்கலை வாழ்வதற்கு உறுதுணையாக இருக்கும் கவிஞர் ‘ஆதிரா முல்லை’ முனைவர் ப. பானுமதி அவர்களே,

வீ.கே.கே. மெட்ரிக்கு லேசன் மேனிலைப் பள்ளி யின் தாளாளரும் என் தாயாருமான, திருமதி கமலா மணிமொழியன் அவர்களே,

‘பயிற்றிப் பல கல்வி தந்து இந்தப் பாரை உயிர்த்திட வேண்டும்’

என்ற பாரதி வாக்குப் போல எப்பாடு பட்டே னும் தரமான தகுதியான கல்வியைத் தமிழ்ப் பள்ளிப் பிள்ளைகளுக்கு அளிக்க வேண்டுமெனவும்,

‘உள்ளுவது எல்லாம்
உயர்வு உள்ளல்’

என்றபடித் திட்டமிட்டுச் செயல்படும் மாநிலக் கல்வி யியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குனர், மாலையில் மற்றுமோர் சிறப்புரை ஆற்ற வந்திருக்கும் முனைவர் திரு. அறிவொளி அவர்களே,

மாணவர்களின் பெரும் வெற்றிக்கு இலக்கணம் கூற வரவிற்கும் பட்டிமன்ற தலைவர், தேனருவித் தென்றல் பேராசிரியர் மு.இராம சந்திரன் அவர்களே,

திரு.ரங்கநாதன் கவிதா அவர்களே, திரு.கார்த்தி கேயன் மணிமொழியன் திருமதி. அபிராமி அவர்களே, திரு. கல்யாணராஜன் மணி மொழியன் திருமதி. யோக லெட்சுமி அவர்களே, AVIT கல்லூரி முதல்வர், முனைவர் திரு.P.சங்கர் அவர்களே, ஆறுபடை வீடு பொறியியற் கல்லூரியின் உயிரியல் துறையின் தலைவர் முனைவர் கிரி ரெங்கசாமி அவர்களே

‘உவப்பத் தலைக்கூடி
உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்’’(394)

என இங்கு குழுமியிருக்கும் தமிழ் அறிஞர்களே,

‘எனைத்தாலும் நல்லவை
கேட்க அனைத்தாலும்
ஆன்ற பெருமை தரும்’

என்ற சுயமான சிந்தனைகளை மாணவர்களுக்கு வழங்கும்




தன்னலமற்ற ஆசிரியர் பெருமக்களே,

மாணவச் செல்வங்களே,

கவிஞர் திரு.ஏர்வாடி ராதா கிருஷ்ணன் அவர்களே,

மதுரையில் இருந்து வருகை புரிந்திருக்கும் மார்ஷல் முருகன் அவர்களே,

அசோக்ராஜ் அவர்களே,

முனைவர் மோ. பாட்டழகன் அவர்களே,

எமது பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் அனைத்து நிலை அலுவலகர்களே, ஊழியர்களே,

இங்கு எங்கள் அழைப்பினை ஏற்று வருகை புரிந்திருக்கும் அன்பர்களே, பத்திரிக்கையாளர்களே, உங்கள் அனைவருக்கும் முதற்கண் என் வணக்கத்தை தெரிவித்துக்கொண்டு உங்கள் அனைவரையும் வரவேற்று மகிழ்கின்றேன்.

தமிழ்மொழி வளர்ச்சிக்கும் தமிழ் இலக்கியங்களின் மேன்மைக்கும், திருக்குறள் நெறிபரப்பும் பணிகளிலும் தன்னையே அர்ப்பணித்துக் கொண்டவர் மணிமொழியனார் அவர்கள். திருக்குறள் இந்தியத் திருநாட்டின் தேசிய நூலாக வேண்டுமென அயராது பாடுபட்டவர். மற்றும் இந்தியத் திருநாட்டின் கண் அமைந்துள்ள அனைத்து பல்கலைக்கழகங்களிலும் திருவள்ளுவர் பெயரில் இருக்கை (chairs) நிறுவுவதற்குப் பெரும் முயற்சி எடுத்துக் கொண்டவர் திரு.மணிமொழியனார் அவர்கள். இளைஞர்கள் மற்றும் மாணவர்கள் மத்தியில் திருக்குறள் கருத்துக்கள், சென்றடைய வேண்டுமென விரும்பியவர். அகில இந்திய

அளவில் அறுபதாயிரம் மாணவ மாணவியருக்கு மேல் திருக்குறள் திறன் மற்றும் அறிவுப்போட்டிகளை கடந்த முப்பது ஆண்டுகளாக சிறப்பாக நடத்திப் பரிசுகள் வழங்கியுள்ளார்.

தனது பிறந்தநாள் அன்று கல்லூரிகளில் திருக்குறள் நூலினை ஆயிரத்திற்கு மேற் பட்ட மாணவர்களுக்கு இனிப்புடன் வழங்கிக் கொண்டாடுவது அவரது வழக்கம். குறிப்பாக இளைஞர்களிடத்தில் திருக்குறள் சென்றடைய வேண்டுமென விரும்புவார். கல்விச் சாலைகள், பள்ளிக் கூடங்கள் பல்கலைக் கழகங் களில், திருக்குறள் இடம் பெற வேண்டும் என்பது அவரது பெரும் விருப்பமாக இருந்தது.

இளமைப் பருவம் முதல் குறட்பாக்களில் சிந்தை மயங்கி, வளர்ந்து, குறள் கருத்துக்களைச் சமுதாயப் பொதுவுடமை ஆக்கிப் பரப்பும் உலகத் திருக்குறள் பேரவையின் பொதுச்செயலாளராக பொறுப்பேற்றிருந்த என் தந்தையார் விட்டுச் சென்ற பணிகளைச் சிறிதேனும் நாம் தொடரவேண்டும் என்ற ஆவலில் இம்முத்தமிழ் ஆயம் தொடங்கப்படுகிறது.

இயல், இசை, நாடகத்துடன், தனித்தமிழும், ஞாலப் பழமை யும் காலப் புதுமையும் தன்னகத்தே கொண்டு சிறப்புடையதும், தமிழரின் பெருமைக்கு உரை கல்லாக விளங்கும் குறள்நெறிகள், நம் மாணவர்களிடையே பரவ வேண்டும், வள்ளுவத்தின் மேன்மையை மாணவர்கள் உணரவேண்டும் என்னும் ஆவலில் இவ்வாயம் தொடங்கப்படுகிறது.

திருக்குறளை முற்றிலும் கற்றுணர்ந்து வள்ளுவர் காட்டிய அறவழியில் வாழ்ந்து, அனைவரிடத்திலும் அன்புடனும், பண்புடனும் பாசத்துடனும் பழகி எல்லோர் நெஞ்சிலும் நீங்காத இடத்தைப் பிடித்தவர் திரு.மணிமொழியனார் ஆவார். திருக்குறளின் அருமை பெருமைகளை அமெரிக்கா, ஐரோப்பிய மற்றும் கிழக்கு இந்திய நாடுகளில் பிரபலப்படுத்தியும் பேரவைக் கிளைகளை அங்கு நிறுவியும் உள்ளார்.

மாதந்தோறும் தமது காலேஜ் ஹவுஸ் விடுதி யின் திருவள்ளுவர் அரங் கில்

சிந்தனைக்கும் செயலுக்கும் மிக்க பயன் தரும் தலைப்பினைத் தேர்ந்து அத்தலைப்பில் பேச வல்லப் புலமை மிக்கோரைக் கொணர்ந்து ஆய்வு செய்தவர் அவர். வருடந்தோறும் 3 நாட்களுக்குத் திருக்குறளுக்குத் திருவிழா கண்டவர்.



புதிதாக மதுரையில் வெளியிடப் பெறும் தமிழ் நூல்கள் உலகத் திருக்குறள் அரங்கினையே நாடி வந்தன. திறனாய்வோடு கூடிய அறிமுக விழாவாகத் திரு மணிமொழியனாரிடம் பயன் கொண்டனர். திருக்குறள் பேரவை சாகித்ய அகடமி மற்றும் பல்கலைக் கழகம் என்பனவற்றோடு இணைந்து நடத்திய 'உலக அரங்கில் திருக்குறள்" எனும் கருத்தரங்கம் தனிச் சிறப்புடையது. தனி ஆய்வு நூலாக வெளியிடப்பட வேண்டியது.

திரு.மணிமொழியனார் உரையாடும் போதும் மேடைகளில் பேசும் போதும் தலைப்புடன் தொடர்புடைய குறள்களை நொடிக்கு நூறோ என அவையினர் வியக்குமாறு சொல்வார் என மூதறிஞர் தமிழண்ணலும் இவரை நடமாடும் திருவள்ளுவர் எனத் தமிழ் கூறும் நல்லுலகமும் பாராட்டும். பதினைந்துக்கும் மேற்பட்ட பட்டங்களை இவர் பெற்றிருந்தாலும் குன்றக்குடி சன்னிதானம் வழங்கிய திருக்குறள் செம்மல் என்ற பட்டமே இவர் பெயருடன் இணைந்தது. மதுரை காமராஜ் பல்கலைக்கழகம் இவருக்கு தமிழ் பேரவை பட்டம் அளித்து கௌரவித்தது. இன்றைய தமிழக அரசு

அவருக்கு தமிழ் செம்மல் விருது அளித்துள்ளது.

உலகப் புகழ்பெற்ற இலண்டன் மாநகரில் தமிழில் வெளி வரும் மாதப் பத்திரிக்கை புதினத்தில் திரு.மணிமொழியனாரது கட்டுரைத் தொகுப்புகளும், கருத்துக் கோர்வை களும் தற்போது பிரசுரிக்கப் படுகின்றன.

இவர் முத்தான மூன்று இலக்கிய நூல்கலையும் எழுதியவர். அவர் ஆற்றிய உரைகளையும், வரைந்த கட்டுரைகளையும், புத்தகங் களையும் தொகுத்து மணி மொழியம் எனும் நூலாக வெளியிடப்பட்டுள்ளது. www. manimozhian.com என வலைத் தளத்திலும் அரங்கேறியுள் ளது. எப்போதும் நற்சிந்தனை யோடும் இன்சொல் இயம்புவதை வழக்கமாகவும் தீச்செயல் தவிர்த்து நற்செயல் புரிவதை வாழ்வின் குறிக் கோளாகவும் தன் வாழ்நாள் இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்த எனது தந்தையார் திரு.மணிமொழியனார் பெயரில் முத்தமிழ் ஆயம் தொடங்கப் பெறுவதில் நான் பெருமகிழ்ச்சி அடை கிறேன்.

இது இன்று மட்டும் அல்லா மல், தொடர் நிகழ்ச்சிகளாக, வருகின்ற ஆண்டுகளிலும் இந்த "முத்தமிழ் ஆயம்" பல்வேறு தமிழ் அறிஞர்களது படைப்புகளையும், தமிழ் இலக்கியங்களையும் திருக் குறள் செம்மல் ந.மணிமொழி யனார் அவர்களது படைப்பு களையும் அலசி ஆராய்ந்து செயல் பட இருப்பது குறித்து பெரும் மகிழ்ச்சி அடை கின்றேன்.

நயனொடு நன்றி
புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு.

என்று கூறிக் கொண்டு மீண்டும் ஒருமுறை உங்கள் அனைவரையும் வரவேற்பதில் பெருமையும் பேருவகையும் அடைகிறேன்.

நன்றி வணக்கம்.

'வெற்றிமுனை' படியுங்கள்... பயனடையுங்கள்...